# விநாயகர் கவசம்
# விநாயகர் அகவல்



சிவபதமடைந்த எமது அன்புத்தந்தை

## திரு. கணபதிப்பிள்ளை கந்தசாமி

அவர்களின் ஆறாம்மாத ஞாபகார்த்த வெளியீடு

PRODUCED BY. PT PABRIK KERTAS TJIWI KIMIA
Made in Indonesia

சிவமயம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு!

காசிப முனிவர அருளிய

# விநாயகர் கவசம்

(இதை ஓதுபவர்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்வார்.)

தலைமுடி, நெற்றி, புருவம், இணைவிழிகள்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியை என்றும் விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில் மகோ தரர் காக்க
தடவிழிகள் பாலசந் திரனார் காக்க. (1)

உதடு, நாக்கு, முகவாய்க்கட்டை, வாக்கு, பல், காது, மூக்கு

கவின்வளரும் அதரம் கசமுகர் காக்க
காலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க
நனிவாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகை துன் முகர் காக்க
அள் எழிற் செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைச் சித்தி தார்த்தர் காக்க (2)

முகம், கழுத்து, இணையான தோள்கள், முலை
உள்ளம், வயிறு

காமருபூ முகந்தன்னைக் குணேசர்
நனி காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம்மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத் தோமகலுங் கணநாதர் காக்க
அகட் டினைத் துலங்கே ரம்பர் காக்க (3)

பக்கங்கள், குறி, குய்யம், தொடைகள்,

பக்கம் இரண்டையுந்தரா தரகர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்கண பன் காக்க
ஊருவை மங்களமூர்த்தி உவந்து காக்க (4)

முழங்கால்கள், இருகால்கள், இருகைகள், முன்கைகள்

தாள்முழந்தாள் மகாபுத்தி காக்க
இரு பதம் ஏக தந்தர் காக்க
வாழ்கரம் க்ஷிப்பிரப் பிரசாதனர் காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாரபூரகர் காக்க
விரல்பதும் அத்தர் காக்க
கேள்கிளரும் நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் பத்தீசர் காக்க (5)

திக்குகள் அனைத்திலிருந்தும்

அக்கினியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர்தென் திசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர் காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க
வாயுவிற் கசகர் ணன் காக்க
திகழ் உதீசி தக்கநிதி பன்காக்க
வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க (6)

~~பகல், இரவு முதலிய காலங்களில்~~

பிறதொல்லைகளிலிருந்தும்

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க
இர வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓசையின் விக் கினகிருது காக்க
இராக் கதர்பூதம் உறுவேதாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்திறந்தால்
வருந்துயரும் முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு
பாசாங்குசர்தாம் விரைந்து காக்க (7

மானம், புகழ், முதலியவற்றையும், உற்றார், உறவினரையும்

மதிஞானம் தவந்தானம் மானம் ஒளி
புகழ்குலம் வண்சரீரம் முற்றும்
பதிவான தனம் தானியம் கிருகம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர் முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க (8)

படிப்போர், நோயற்றவராக வாழ்வர்

வென்றி சீவிலர் கபிலர் காக்க
கரி யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுலனை முக்காலமும்
ஓதிடினும் பால் இடையூறொன்றும்
ஒன்றுறா முனிவரவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற ஆங் கவர்தேகம் பிணியற வச்
சிரதேக மாகி மன்னும் (9)

## விநாயகர் கவசம் முற்றிற்று

## கணபதி ஸ்தோத்திரம்

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பக்ஷிதம்
உமா ஸுதம் சோகவினாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ் வக
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந:ப்ரசோதயாத்

# விநாயகர் அகவல்

(ஔவையார்)

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசைப்பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்து அழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்

வேழமுகமும் விளங்குசிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்

இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூல் திகழ்ஒளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழம்நுகரும் மூஷிகவாஹன

இப்பொழுதென்னை ஆட்கொளவேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய மூதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற்புகுந்து

குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புருகணையில் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினைதன்னை அறுத்திருள்கடிந்து

தலமொரு நான்கு தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பதுவாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத்து அங்குசநிலையும்

பேறாநிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணில்
நான்றுஎழுபாம்பின் நாவிலுணர்த்திக்

குண்டலியதனில் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமுங்

குழத்சகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டி
சண்முகதூலமுஞ் சதுர்முகசூக்ஷமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்

புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில்காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித்து எனக்கருள்செய்து

முன்னைவினையின் முதலைக்களைந்து
வாக்குமனமும் இல்லாமனோலயந்
தேக்கியேஎந்தன் சிந்தைதெளிவித்து
இருள்வெளியிரண்டுக்கு ஒன்றிடமென்ன
அருள் தருமானந்தது அழுத்தியென்செவியில்

எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தில் நிலையறிவித்துத்

தத்துவநிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தகவிநாயக விரைகழல்சரணே.

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

## விநாயகர் சோடச நாமாவளி

திருச்சிற்றம்பலம்

ஓம் சுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணிகாய நம:
ஓம் லம்போதராய நம:
ஓம் விகடாய நம:
ஓம் விக்நராஜாய நம:
ஓம் கணாதிபதயே நம:
ஓம் தூமர கேதவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் பாலசந்த்ராய நம:
ஓம் கஜாநநாய நம:
ஓம் வக்கிரதுண்டாய நம:
ஓம் சூர்ப்ப கர்ணாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:

தயா அச்சகம் யாழ்ப்பாணம்.

# பிள்ளையார் சிந்தனை

சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜெயஜெய
சீரிய ஆனைக் கன்றே ,,
அன்புடை அமரரைக் காப்பாய் ,,
ஆவித் துணையே கணபதி ,,
இன்னடைச் சடைமுடி இறைவா ஜெயஜெய
ஈசன் தந்தருள் மகனே ,,
உன்னிய கருமம் முடிப்பாய் ,,
ஊர்நவ சந்தி உகந்தாய் ,,
எம்பெருமானே இறைவா ,,
ஏழுலகுந் தொழ நின்றாய் ,,
ஐயா கணபதி நம்பியே ,,
ஒற்றை மருப்புடை வித்தகா ,,
ஓங்கிய ஆனைக் கன்றே ,,
ஔவிய மில்லா அருளே ,,
அஃகர வஸ்து வானவா ,,
கணபதி என்வினை களைவாய் ஜெயஜெய
ஙப்போர் மழுவொன் றேந்தியே ,,
சங்கரன் மகனே சதுரா ,,
ஞயநம் பிலர்பா லாடியே ,,
இடம்படு விக்கின விநாயகா ,,
இணங்கிய பிள்ளைகள் தலைவா ,,
தத்துவ மறைநெறி வித்தகா ,,
நன்னெறி விக்கின விநாயகா ,,
பள்ளியி லுறைதரும் பிள்ளாய் ,,
மன்றுள் ஆடும் மணியே ,,
இயங்கிய ஞானக் குன்றே ,,
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ,,
இலவக் கொம்பொன் றேந்தியே ,,
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ,,
அழகிய ஆனைக் கன்றே ,,
இளமத யானை முகத்தாய் ,,
இரகுபதி விக்கின விநாயக ,,